(2024-25-ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட மாணவ-மாணவியருக்கு மட்டும்)

(பக்கங்களின் எண்ணிக்கை : 2 )

**SUBJECT CODE** **24 UTM 204**

**REG.NO:**

என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி) பொள்ளாச்சி

பருவ இறுதித் தேர்வுகள் : மே – 2025

பி.ஏ. தமிழ் இலக்கியம் மதிப்பெண்கள் : 75

இரண்டாம் பருவம் நேரம் : 3 மணி நேரம்

## பகுதி – 3

## நன்னூல் – சொல்லதிகாரம்

### பகுதி – அ (10x1=10 மதிப்பெண்கள்)

**பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** (K1)

1. *செந்தமிழ் நிலம் ஒழிந்த பிற நிலங்கள் எத்தனை …………*

   *அ) 10 ஆ) 12 இ) 15 ஈ) 17*

2. *ஆறாம் வேற்றுமையுணர்த்தும் தற்கிழமைப் பொருட்களின் எண்ணிக்கை ……..*

   *அ) 2 ஆ) 3 இ) 5 ஈ) 11*

3. *13 குணங்களிலும் வரும் உரிச்சொல் யாது?*

   *அ) தவ ஆ) நனி இ) கடி ஈ) கூர்*

4. *கீழ்க்காணுபவற்றுள் எது இறந்த காலத்தைக் காட்டும் வினையெச்சம் அல்ல?*

   *அ) செய்பு ஆ) செய்யூ இ) செய் ஈ) செய*

5. *"வினாவினும் செப்பினும் ……. சினைமுதல்"*

   *அ) விரைந்த ஆ) விரவா இ) விரவிய ஈ) விரையூ*

**பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வரிகளில் விடையளிக்க.** (K2)

6. *'திசைச்சொல்' – குறிப்புரைக்க.*
7. *'வேற்றுமை மயக்கம்' - குறிப்புரைக்க.*
8. *"ஆக்க வினைக்குறிப்பு ஆக்கம் இன்று இயலா" – சுட்டுக.*
9. *கொளல் வினாவிற்குச் சான்றுரைக்க.*
10. *'மரபு' – குறிப்புரைக்க.*

### பகுதி – ஆ (5 x 5 = 25)

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு மட்டும் விடையளிக்க.** (K3)

11. அ) *மூன்றிடத்தும் சொல் தன்னையும் பொருளையும் உணர்த்துதல் குறித்துச் சான்றுகளுடன் விவரி.*

    **(அல்லது)**

    ஆ) *திணைப் பொதுப்பெயர் பால்பொதுவாதலை விளக்கிச் சான்றுரைக்க.*

12. அ) *பெயரெச்சம் குறித்துச் சான்றுடன் விளக்குக.*

    **(அல்லது)**

    ஆ) *'ஒழிபு' குறித்த நன்னூலாரின் கருத்துகளை ஆராய்க.*

13. அ) *விளியை ஏற்கும் பெயர்கள் குறித்துச் சான்றுடன் எழுதுக.*

    **(அல்லது)**

    ஆ) *எட்டு வேற்றுமைகளுக்குரிய முடிவு இடம்குறித்து விவாதிக்க.*

(த.பி.பா.)

14. அ) *திணை வழுவமைதி குறித்துச் சான்றுடன் விளக்குக.*

(அல்லது)

ஆ) *இடம் வழுவாமல் காத்தல் குறித்த நன்னூலாரின் கருத்துகளை எழுதுக.*

15. அ) *இடைச்சொல்லின் பொருள்களை விளக்கிச் சான்றுரைக்க.*

(அல்லது)

ஆ) *உயிர்ப் பொருள், உயிரல் பொருள்களின் குணப்பண்புகளை வேறுபடுத்துக.*

**பகுதி – இ** (5 x 8 = 40)

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு மட்டும் விடையளிக்க.**
**(K4 (Or) K5)**

16. அ) *நன்னூலார் சுட்டும் சொல்லின் பொதுவிலக்கணத்தைச் சான்றுகளுடன் பொருத்திக் கட்டுரைக்க.*

(அல்லது)

ஆ) *நன்னூலாரின் பெயரியல் கோட்பாடுகளை ஆராய்க.*

17. அ) *நன்னூலாரின் வேற்றுமைக் கோட்பாட்டினைச் சான்றுடன் கட்டுரைக்க.*

(அல்லது)

ஆ) *ன், ள், ர் எனும் மெய்யீற்றுப் பெயர்கள் விளியேற்கும் முறையினை விளக்கியுரைக்க.*

18. அ) *வினைமுற்றுகள் குறித்துச் சான்றுடன் விவரிக்க.*

(அல்லது)

ஆ) *நன்னூலாரின் வினையெச்சக் கோட்பாட்டினைக் கட்டுரைக்க.*

19. அ) *"பொருள்கோள்கள் சிறந்த படைப்பாக்க உத்திகளாகும்" என்ற கூற்றினை நிறுவுக.*

(அல்லது)

ஆ) *அறுவகை வினா, எண்வகை விடைகளின் நெறிமுறைகளைச் சான்றுடன் விவரி.*

20. அ) *எண்ணிடைச் சொற்கள் குறித்த நன்னூலாரின் கருத்துகளைக் கட்டுரைக்க.*

(அல்லது)

ஆ) *நன்னூலாரின் உயிர்ப்பொருள் கோட்பாட்டினை அறிவியல் முறையோடுப் பொருத்துக.*



**********